Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 75/-

சிவ சிவ

சூரியனார் கோயில் ஆதீனத் திங்களிதழ்

மந்திரம் 8 டிசம்பர் - 2006 ஒலி 4

Public domain. Digitization Muthulakshmi Research Acade

சிதைந்து போன தலப்பெயர்கள்---

தேவார மூவரும் பாடியுள்ள தேவாரத் தலப்பெயர்கள் பல இற்றை நாளில் முழுமையும் சிதைந்து வழங்கப்பெற்று வருவதால் தேவாரத் தல யாத்திரையினை மேற்கொள்ளும் சிவநேயச் செல்வர்களுக்கு ஏற்பட்டு வரும் நடைமுறைச் சிக்கல்களும் இடர்ப்பாடுகளும் சொல்லில் அடங்கா. தலத்தின் இயற்பெயரைச் சொல்லிச் செல்லும் வழி முறைகளைப் பற்றிக் கேட்டால் அப்படிக் கேட்டவரை நோக்கி ஏகடியம் செய்யும் நிலைமையினை என்னென்று சொல்வது. இதோ.... சிதைவுற்ற சில தலப்பெயர்கள்

திருஅதிகை வீரட்டம்	-	பண்ருட்டி
திருஅரசிலி	-	ஒழிந்தியாப்பட்டு
அரதைப்பெரும்பாழி	-	அரித்துவார மங்கலம்
அன்னியூர்	-	பொன்னூர்
ஆப்பனூர்	-	செல்லூர் (மதுரை)
இரும்பூளை	-	ஆலங்குடி/குருஸ்தலம்
ஊரல்	-	தக்கோலம்
எதிர்கொள்பாடி	-	மேலைத்திருமணஞ்சேரி
எருக்கத்தம்புலியூர்	-	ராஜேந்திரப்பட்டினம்
ஓத்தூர்	-	செய்யாறு
கடம்பந்துறை	-	குளித்தலை
கடவூர்மயானம்	-	திருமெய்ஞானம்
கடிக்குளம்	-	கற்பகநாதர் குளம்
கடுவாய்க்கரைப்புத்தூர்	-	ஆண்டாங்கோயில்
கடைமுடி	-	கீழையூர்
கண்ணார்கோயில்	-	குறுமாணக்குடி
கருக்குடி	-	மருதாநல்லூர்
கருப்பறியலூர்	-	தலைஞாயிறு
கலையநல்லூர்	-	சாக்கோட்டை
கலிக்காமூர்	-	அன்னப்பன்பேட்டை
கற்குடி	-	உய்யக்கொண்டான்மலை
காணப்பேர்	-	காளையார்கோயில்

- வரும்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதீனக் குருமரபு வாழ்த்து

'சீர்மேவு கயிலாய பரம்பரையில் சிவஞான சித்தி காட்டும்
ஏர்மேவு வாமமுனி சந்ததிக்கோர் இளஞான பானுவாகிப்
பார்மேவு பரிதிபுரி வாழ் சிவாக்கிர குருவாம் பரமதேவன்
தார்மேவு கந்தகுரு திருமரபு நீடூழி தழைக மாதோ

***

உள்ளே...

- அமிர்த சஞ்சீவிகள்
- கருவின் உயிரே!
- யாக்கையின் பயன்
- அடியோர்வழிபாடேஅருஞ்செல்வம்
- நீரின்றி அமையாது உலகு
- உன்தன் விருப்பு அன்றே!
- உள்ளம் குளிரும்மே!
- ஆதித்தர் பன்னிருவர்
- முத்துக்கள் பத்து
- சருவ சிருட்டி
- வினை தீர வழி
- ஆலமரம்
- வடமொழி சொல்விளக்கம்
- வள்ளலார்வழிபட்டசிவத்தலங்கள்
- தேவாரப்பாடல்களில் எண்ணலங்காரம்
- அனுபவத் துணுக்கு
- முத்தியில்தான் எத்தனை வகை?
- அறிவைக் கொல்லும் அழுக்காறு

Published with Financial Assistance from the Central Institute of Indian Languages, (Ministry of Human Resource Development, Dept., of Secondary and Higher Education, Govt. of India) Manasagangotri, Mysore - 570 006 vide sanction Letter No. 53 - 10(15)/ 2005 - 06. /TAM/LM/GRNT dated 11th November, 2005 under the scheme of Grant - in Aid.

சிவ சிவ

சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதிதானே

மந்திரம்-8 ஒலி-4
டிசம்பர்- 2006

குரியனார்கோயில் ஆதீனகர்த்தர்
திருவருள் துணைகொண்டு
அச்சிட்டு வெளியிடுபவர்,
ஆசிரியர்
சித்தாந்த ரத்தினம்
தி.திருநாவுக்கரசு
B.Sc., MS(IT)., P.G.D.C.A.,
பதிவு அறுவலகம்:
சிவ சமயம்மிகை இல்லம்
83/435, முல்லைபுதியீட்டு வசதிக் குடியிருப்பு
தஞ்சாவூர்- 613 005.

தொடர்பு முகவரி:
நிர்வாக அலுவலகம்
8/49, மேலைச்சாலைத் தெரு,
சுந்தரப்பெருமாள்கோவில்.
கும்பகோணம் - 614 208.
Cell : 94434 - 88409

-: ஆசிரியர் குழு :-
ஜெயங்கொண்டம்
வெ. விசய குமார் சுகந்தி
தில்லை சிவமின சிவாயனி
மதுரை ஏ. எஸ். ராஜராஜன்
விசயமங்கலம் வீ. சொக்கலிங்கம்
வந்தவாசி அ.வே. முனுசாமி
கடலூர் வ. ஞானப்பிரகாசம்
சிதம்பரம் சீனு. அருணாசலம்
இரத்தின. திருநாவுக்கரசு
திருவானைக்கா த. மதுசூதனன்

-:ஒளிஅச்சு:-
கல்யாணி கம்ப்யூட்டர் பிரஸ்
கும்பகோணம் ☎ : 0435 - 2425442

Public domain. Digitization Muthulakshmi Research Academ

☆ 'சிவ சிவ' உறுப்பினரும் சிறு நாயக்கன் பட்டி உழவர் ஆய்வு மன்ற மாவட்ட அமைப்பாளருமான K.P. கொண்டான் செட்டி அவர்களின் சரோஜா இல்லப் புதுமனை புகு விழா குருவருள் துணைகொண்டு 29.10.2006 அன்று இனிது நிகழ்வுற்றது.

☆ *29.10.2006:* மதுரை கா. சுந்தர குருகுல இசைப்பள்ளியின் மூன்றாம் ஆண்டுவிழா மதுரை வடக்கு வீதியில் நிகழ்வுற்றது.

☆ *5.11.2006:* சேலம் திருவெம்பாவைப் பெருவிழாக் கழகம் சார்பில் திருமுறைப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

☆ *8.11.2006:* தஞ்சை சைவ சித்தாந்தப் பெருமன்ற நிகழ்வில் T.R. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அயல்நாட்டுப் பயண அனுபவமும் இறைக் கோட்பாடும் பற்றியும், திரு.பொ. காத்தப்பெருமாள் திருமுறை வாழ்வியல் பற்றியும் உரையாற்றினார்.

☆ *19.11.2006:* ஞாயிறன்று தஞ்சை அப்பர் தமிழ்மன்றத்தில் திருநாவுக்கரசர் பற்றிய சொற்பொழிவை டாக்டர் V. ஜெயபால் நிகழ்த்தினார். தவத்திரு சொக்கலிங்க சுவாமிகள் தேவார வகுப்பை நடத்தியுதவினார். - ஆம்பல் முருக வைத்தியலிங்கம்.

☆ *26.11.2006 :* கார்த்திகைத் தீபத் திருவிழாவை முன்னிட்டு ஒன்பது நாட்கள் திருவண்ணாமலை ஆயிரவாள் சத்திரத்தில் இருவேளை அன்னதான நிகழ்வுகள் நிகழ்வுற்றன.

☆ *11.12.2006:* மாதிரிமங்கலம் ஸ்ரீ கைலாசநாதர் கோயில் 108 சங்காபிஷேக விழா. சூரியனார் கோயில் ஆதீனகர்த்தர் திருமுன்பாக நிகழ்வுற உள்ளது.

Public domain. Digitization Muthulakshmi Research Academy



அருள்முதும்...

அமிர்த சஞ்சீவிகள்

ராம ராவண யுத்தத்தின்போது உயிரிழந்த வீரர்களை உயிர்ப்பிக்க அனுமனால் கொண்டு வரப்பெற்றது அமிர்தசஞ்சீவி மலை என்று புராணிகர்கள் கூறுவர். அதுபோல் நம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வுகளும் இனிதாய் நிறைவுற உதவும் திருமுறைப் பாடல்கள் அனைத்தும் நமக்கு அருளாளர்களால் வழங்கப்பெற்ற 'அமிர்த சஞ்சீவிகளே' அவற்றை முழு இறை நம்பிக்கையோடு விண்ணப்பம் செய்து நம் செயல்களைத் தொடங்கிட இறையருளால் அவை அனைத்தும் நலமாதலை நாம் அனுபவப் பூர்வமாக உணர்ந்து மகிழலாம்.

நீலமார்தரு கண்டனே நெற்றியோர்
கண்ணனே ஒற்றைவிடை
சூலமார்தரு கையனே துன்றுபைம்
பொழில்கள் சூழ்ந் தழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர்நற்
கொழுந்தே என் றெழுவார்கள்
சால நீள்தளம் அதனிடைப் புகழ்மிகத்
தாங்குவார் பாங் காவே

என்று பாடியவாறு எழுந்து,

கருவாய்க்கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாய நமஎன்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூரரனே

என்று நீறணிந்து நாம் நாட் கடமைகளை ஆற்றி,

மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்துநின்று நினைதரு நிகழ்வினானே
துஞ்சுபோ தாகவந்து துணை எனக் காகிநின்று
அஞ்சலென் றருளவேண்டும் ஆவடுதுறையுளானே

என்று உறங்கச் செல்ல இன்பமே எந்நாளும் துன்பமில்லை!.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மாதிம் ஒரு மந்திரம்...

நாகை. கி. நாகராசனார்

புகுந்துநின் றான்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் றான்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் றான்உட லால்உயி ராகிப்
புகுந்துநின் றான்புந்தி மன்னிநின் றானே

எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன் சிவன். அப்படியெனில் வாழ்வு-தாழ்வு, இருள்-ஒளி, அறிவுடைமை-அறியாமை எல்லாம் அவன்தானே? அது மட்டுமா? பெண்ணாக இருப்பதும் அவன்தான்? ஆணாக இருப்பவனும் அவனே.

அறிஞர்களின் அறிவாகவும், ஞானிகளின் ஞானமாகவும் மிளிரும் அவன் மூடர்களின் அறியாமையாகவும் இருக்கின்றான். அறியாமையாக இருக்கிறான் என்றால் அந்த மூடன் தன்னை அறிந்து கொள்ளாதவாறு இருக்கிறான் என்று பொருள்.

ஆன்மீக நாட்டம் உள்ளவர்களின் புகழுரையாகவும், நம்பிக்கை அற்றவர்கள் பிதற்றும் இழிமொழியாகவும் இருப்பவன் சிவன். எல்லாம் அவன் செயல் என்று இறைவனையே நம்பியுள்ள நல்லோர்கள் வாழும் பூமியில் இறைவன் இல்லவே இல்லை என்று இருக்கும் ஒன்றை இல்லை என்று சொல்வதுடன் இறைவனைத் தூற்றுவாரும் வாழத்தானே செய்கிறார்கள்! அவர்களை வாழ வைப்பதும் அவன்தானே?

ஆவிகளுக்கு, அவை வினைப் பயனை நுகர, ஏற்ற உடல்களைக் கருவிலே அமைப்பவனும், கருவின் உயிரின் உயிராய் இருப்பவனும் சிவனே ஆவான். தன்னால் அருளப்பட்ட ஆறாவது அறிவினை முறையாகப் பயன்படுத்தி மக்களை நல்வழிப்படுத்தும் சான்றோர்களின் இதயத்தில் வீற்றிருந்து அனைத்தையும் ஆண்டு கொண்டு இருப்பவன் அண்ணலாம் சிவனே.

''ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் அருளுரை'' நூலிலிருந்து...

Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாக்கையின் பயன்

திருச்சி. சிவ. காளைமுத்து

அப்பரும் - சம்பந்தரும்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனினும் அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தலரிது. பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும் என்பவை எல்லாம் ஆன்மீக நெறியுடையோர் அனைவரும் அறிந்த தெய்வீக வாக்கு. மானிடப் பிறவிப் பயன் பெற்றோர் அனைவரும் இறைவன் தாளினைப் பற்றுக்கோடாகச் சேர்ந்தாலல்லாது இப்பிறவி பெற்றதால், எந்தப் பயனுமில்லை என்பதை, சித்தர்கள், முனிவர்கள், யோகிகள், சந்தானக்குரவர்கள், சமயக்குரவர்கள், ஆன்மீகச் சான்றோர்கள் என அனைவரும் வலியுறுத்தியுள்ளனர்.

இதனைத் திருவள்ளுவர் தமது முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து 10 பாடல்கள் மூலம் தெளிவுறுத்தியிருக்கிறார். குறிப்பாக

பொறிவாயி லைந்தவித் தான்பொய் தீரொழுக்க
நெறிநின் றார்நீடுவாழ்வார் (குறள் 6)

அறவாழி யந்தணன் தாள்சேர்ந் தார்க்கல்லால்
பிறவாழி நீந்த லரிது (குறள் 8)

என்ற இருபாடல்களின் மூலம் யாக்கை பெற்றதன் பயனையும் இறைவனின் தாளினையடைந்தார் பெறும் பேற்றினையும் உணர்த்துகிறார்.

இவ்யாக்கையை நமக்களித்த இறைவனை வழுத்தும் முறையினை அப்பர் சுவாமிகள் தமது, ''திரு அங்கமாலை''ப்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பதிகத்திலும் (4ஆம் திருமுறை), சம்பந்த சுவாமிகள் தமது 2ஆம் திருமுறையில், ''திரு ஆமாத்தூர்''ப் பதிகத்திலும் கூறியிருப்பதை ஈண்டு ஒப்பு நோக்கி மகிழலாம்.

அப்பர் வழுத்தும் பாங்கு

1. தலை

தலையே நீ வணங்காய் தலைமாலை
தலைக்கணிந்து தலையாலே பலி
தேருந்தலைவனைத் தலையே நீ
வணங்காய்

2. கண்கள்

கண்கள் காண்மின்களோ கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசி நின்றாடும்
பிரான்றன்னைக் கண்கள்
காண்மின்களோ

3. செவிகள்

செவிகாள்கேண்மின்களோ
சிவன்எம் மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம்
எப்போதும் செவிகாள்
கேண்மின்களோ

4. நா/வாய்

வாயே வாழ்த்துகண்டாய்
மதயானையுரி போர்த்துப் பேய் வாழ்
காட்டகத்தாடும் பிரான் தன்னை
வாயே
வாழ்த்து கண்டாய்.

சம்பந்தர் வழுத்தும் பாங்கு

சாவவரை வில்லாகச் சந்தித்த
வெங்கணையால் காவல் மதிலெய்
தான் கண்ணுடை நெற்றியான்
யாவருஞ் சென்றேத்தும் ஆமாத்தூர்
அம்மான் தேவர் தலை வணங்குந்
தேவர்க்குந்தேவனே

கோணாகப் பேரல்குல்கோள்
வளைக்கை மாதராள் பூணாகம்
பாகமாப் புல்கியவளோடும் ஆணாகங்
காதல்செய் ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்ணெல் லாங் காணாத
கண்களே

தாளால் அரக்கன் தோள் சாய்த்த
தலைமகன் றன் நாள் ஆதிரை
யென்றே நம்பன்றன் நாமத்தால்
ஆளானார் சென்றேத்தும் ஆமாத்தூர்
அம்மானைக் கேளாச் செவி
யெல்லாங் கேளாச் செவிகளே

மாறாத வெங்கூற்றை மாற்றிமலை
மகளை வேறாக நில்லாத வேடமே
காட்டினான் ஆறாததீயாடி ஆமாத்தூர்
அம்மானைக் கூறாத நாவெல்லாங்
கூறாத நாக்களே

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

5. நெஞ்சம்

நெஞ்சே நீ நினையாய் நிமிர்
புன்சடை நின்மலனை மஞ்சாடும்
மலைமங்கை மணாளனை நெஞ்சே
நீ நினையாய்

6. கழல்

இறுமாந்திருப்பன் கொலோ
ஈசன்பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமானேந்தி தன் சேவடிக் கீழ்ச்
சென்றங்கு இறுமாந்திருப்பவன்
கொலோ

கால்களாற்பயனென் கறைக்கண்டனுறை
கோயில்கோலக் கோபுரக் கோகரணஞ்
சூழாக் கால் களாற் பயனென்

பிச்சை பிறர் பெய்யப் பின்சாரக்
கோசாரக் கொச்சை புலால் நாற
ஈருரிவை போர்த்து கந்தான்.
அச்சந்தன் மாதேவிக்கீந்தான்தன்
ஆமாத்தூர் நிச்சல் நினையாதார்
நெஞ்சமும் நெஞ்சமே

புள்ளுங் கமலமும்கைக் கொண்டார்
தாமிரு உள்ளும் அவன் பெருமை
ஒப்பளக்கும் தன்மையதே. அன்னல்
விளை கழனி ஆமாத்தூர் அம்மான்
எம் வள்ளல் கழல் பரவா
வாழ்க்கையும் வாழ்க்கையே

துன்னம்பெய் கோவண மும்தோலு
முடை யாடை பின்னஞ் சடை
மேலோர் பிள்ளைமதி சூடி
அன்னஞ்சேர் தண்கானல் ஆமாத்தூர்
அம்மான்றன் பொன்னம்கழல்
பரவாப் பொக்கம் பொக்கமே

இவை தவிரவும் சேரமான் பெருமாள் நாயனாரும், சிந்தனை செய்ய மனம் அமைத்தேன். செப்ப நா அமைத்தேன். வந்தனை செய்யத் தலை அமைத்தேன். கை தொழ அமைத்தேன். பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன். மெய் அரும்ப வைத்தேன். வெந்த வெண்ணீறணி ஈசற்கு இவை யான் விதித்தனவே என்றும்,

அப்பர் பெருமான் தமது 6ம் திருமுறையின் தனித் திருத் தாண்டகத்தின் 934ம் பாடலில்,

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித் திட்டுண்ணாராகில்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அருநோய்கள் கெடவெண்ணீறணி யாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வெண்ணில்
பெரு நோய்கள் மிகநலியப் பெயர்த்துள் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

என்றும் பரவுகின்றார். அடியார்களின் இலக்கணமாக 1. கண்டம் விம்முதல் 2. நாத்தழுதழுத்தல் 3. நகைமுகம் காட்டல் 4. உடல் நடுங்குதல் 5. மயிர் சிலிர்த்தல் 6. உடல் வியர்த்தல் 7. சொல்லின்மை 8. வசமழிதல் 9. கண்ணீர் அரும்பல் 10. வாய் விட்டழைத்தல் ஆகிய பத்து குறிப்புகளை முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

எனவே நமக்கு இவ்யாக்கையை அளித்த இறைவன் சிவபெருமானின் இணைகழலைச் சென்றடையத் தினமும் இறைவன் உறையும் கோயிலைக் கால்களால் நாடிச்சென்றும், கோபுர தரிசனமும், இறைவன் திருமேனியழகையும் கண்ணாரக் கண்டு கண்ணீர் சொரிந்தும், இறைவன் புகழை நாவாரப் புகழ்ந்து பாடியும், திருமுறைகளைச் செவி குளிரக் கேட்டும், உடம்பு முழுதும் தரையில் படவீழ்ந்து தலை வணங்கியும், நெஞ்சம் நெக்குருக நினைந்து நினைந்துருகி இருகை களையும் தலைமேல் குவித்து பத்திமையுடன் தொழுதும் ஐந்தெழுத்து மந்திரத்தை மனமுருக ஓதி வெண்ணீறணிந்து, இம்மையிற் சுகமும், மறுமையில் பேரின்பமும் பெற முழுமுதற் கடவுளாம் சிவபெருமானை வழுத்துவோமாக.

நால்வகைப் படைப்பு நெறிகள்

தெய்வ நலம் வாய்ந்த சிற்பியர்கள் நான்கு யுகங்களிலும் நால்வகையான முறைகளை மேற்கொண்டு தங்கள் படைப்புத் திறனை வெளிப்படுத்தி வருகின்றனர்.

கிரத யுகம் - மனத்தளவில்; திரேதா யுகம் - பார்வையளவில்; துவாபர யுகம் - மந்திர அளவில்; கலியுகம் - ஹஸ்த அளவில்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அடியோர் வழிபாடே அருஞ்செல்வம்

- சிவத்திரு

திருத்தொண்டர் புராணம் குருலிங்க சங்கம வழிபாட்டின் சிறப்பினை எடுத்துக் கூறும் நூலாகும். சங்கம வழிபாட்டின் உயர்வினை எடுத்துக் கூறும் அப்பர் தேவாரத் தொடர்கள்

'அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடை கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே'

என்பனவாகும். எப்படிப்பட்ட நிலையில் அடியார் வணக்கத்தை அப்பர் மேற்கொள்ள விழைகின்றார்? என்பதனை உணர்த்துவன அத்திருத்தாண்டகத்தின் முன்னைய

'சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் மல்லோம்'

எனும் தொடர்களாகும்.

'பொய்ம்மாயப் பெருங்கடலில் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங் கடலை அரித்துத் தின்பீர்'

என்று செல்வம் வேண்டாச் செம்மையரான அப்பர் எவ்வளவு பெரும் நிதியம் அரசாளும் உரிமையொடு கிடைக்கப் பெறினும் அவற்றை வெறுத்து அடியார் வழிபாட்டை மேற்கொள்ள

Public domain. Digitization Muthulakshmi Research Academ

விரும்புகின்றார். அவர் வெறுக்கும் சங்க நிதி பதுமநிதி செல்வ அளவுதான் என்ன? சங்க நிதி பதும நிதி என்னும் அவை குறிக்கும் செல்வத்தின் அளவுதான் என்ன? இதோ...

திருச்செங்காட்டங்குடிக் கோயிலின் கன்னிமூலையில் எண்களுக்கான சங்குதாமரை வடிவங்களைச் சிற்பியர் இங்கு படைத் தளித்துள்ளனர். அவற்றுள் சங்கநிதி என்பது கோடி X கோடி(அதாவது ஒன்றுடன் பதினான்கு சுன்னங்கள் இட்டு எழுதும் எண் ஆகும். 10,00,00,00,00,00,000) இந்த எண்ணை எழுதிக்காட்டத் தமிழர்கள் கையாண்ட சிற்ப வடிவம் சங்கு வடிவாகும். இதனை இருகைகளிலும் ஏந்திய குறட்பூதத்தின் வடிவமாகச் சங்கநிதி வடிவம் இடம்பெற்றுள்ளது.

அதுபோலப் பதும நிதி என்பது மிகப்பெரிய எண்ணான கோடி X கோடி X கோடி அதாவது ஒன்றுடன் முப்பத்து ஐந்து சுன்னங்கள் சேர்ந்த எண் 10,00,00,00,00,00,00,00,00,00, 00,00,00,00,000 இந்தத் எண்ணைக் குறிப்பதற்குத் தாமரை வடிவினைப் பழந்தமிழர்கள் குறித்துள்ளனர். தாமரை மலரினை இரு கைகளிலும் ஏந்திய குறட்பூத வடிவம் பதும நிதியின் சிற்ப வடிவமாகக் கருதப்பெறுகின்றது. இவ்விரு சங்கநிதி பதும நிதிச் சிற்பங்களும் இக்கோயிலில் சிறப்பாக அமைந்துள்ளன.

நால்வகைப் பக்தி நெறிகள்

யுகந்தொறும் இறைவனிடம் பக்தி செலுத்தி முக்தி பெறுவதற்கான நெறிமுறைகள் நால்வகைப்பட்டனவாகப் புராணங்களிலும், இதிகாசங்களிலும் குறிப்பிடப்பெற்றுள்ளன. அந்நால்வகை யுக நெறிகள் வருமாறு...

கிருதயுகம்	-	ஞானநெறி;
திரேதா யுகம்	-	தான நெறி
துவாபர யுகம்	-	யாக நெறி
கலியுகம்	-	பக்திநெறி

Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீரின்றி அமையாது உலகு

- கோலாகலன்

தாகம் தீர்த்து தண்மை தருவது தண்ணீர். ஹைட்ரஜன் இருமடங்கும், உயிர் வளி (Oxygen) ஒரு பங்கும் சேர்ந்த கூட்டுப் பொருளாகும் இது. இது இன்றேல் உலகே இல்லை. அதனாற்றான், 'நீரின்றி அமையாது உலகு', என்றார் வள்ளுவர். 'விசும் பிற்றுளி வீழின் அல்லால் பசும்புற்றுளி காண்பது அரிது' என்றவர் வான்சிறப்பு என்ற அதிகாரத்தை வகுத்தளித்துள்ளார்.

தாயைப் பழித்தாலும் பழிக்கலாம் தண்ணீரைப் பழித்தல் தகாது என்பது முதுமொழி. தாயினும் சிறந்த தண்ணீரைத் தாங்கி ஓடி வருவதால்தான் ஆறுகளுக்கெல்லாம் நமது முன்னோர் தாய்க் குலங்களின் பெயர்களான கங்கை, சிந்து, யமுனை, சரஸ்வதி, நர்மதா, தபதி, கோதாவரி, துங்கபத்ரா, காவிரி முதலானவற்றைச் சூட்டி, அழைத்துப் போற்றி மகிழ்ந்தனர். இதில் பிரம்ம புத்திரா மட்டும் விதிவிலக்கு ஆண் பெயர் கொண்ட நதி.

ஆறு, குளம், ஏரி, அருவி, குட்டை, ஓடை, சுனை, ஊற்று, ஊருணி என அனைத்தையும் நமது முன்னோர் மதித்துப் போற்றி, வணங்கி, வழிபட்டுத் துதித்தனர். தீர்த்தமென அவை கொண்டாடப்பட்டன.

தண்ணீரில் கால் வைப்பது என்றாலே, முதலில் அத்தண்ணீரைத் தொட்டு, வணங்கி, தலையில் தெளித்து, சிறிது பருகி அதன் பின்னர்தான் நீரில் இறங்குவர். அதுவும் கோயில் திருக்குளம் போற்றப்பட்ட விதமே தனி.

ஆனால் இன்று நடப்பதென்ன? அனைத்துக் குப்பைகளும், கழிவுகளும் கொட்டப்படும் குப்பைக் குழிகளாக ஆக்கப்படுகின்றன. மீனுண்ணும் அளவிற்கு மட்டுமே கழிக்கப்பட்ட அழுக்குகள் மாறி, மீனை மேய உண்ணும் அவை விஷ அழுக்குகள் நீரிலே குவிக்கப்படுகின்றன. விளைவு? எல்லாம் நஞ்சாக, நச்சுப் பொருளாக மாறி வருகின்றன.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

இயற்கைத்தாய் சிதைக்கப்படுகிறாள். சிதைக்கின்ற நாம் சிதைக்கப்படுவோம். தாயை இழந்த சேயின் நிலைதான், நீரை இழந்த நம் நிலையும்!

காஷ்மீரில் அன்று 30 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள டால் ஏரி தற்போது பாதியாகச் சுருங்கிவிட்டது. புவிவெப்பம் அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்று லண்டன் ஆய்வறிக்கை (Nov11, 2006 தினமணி) யில் கூறப்பட்டுள்ளது. புவி வெப்பம் கார்பன்-டை-ஆக்ஸைடு, கார்பன்-மோனாக்ஸைடு, சல்பர்-டை-ஆக்ஸைடு போன்ற தொழிற்சாலை வாகனப் புகைகளால், கழிவுகளால் ஒருபுறம் என்றாலும்; அமைதியான வாழ்க்கை இல்லையே என்று வருந்தும் மக்கள் விடும் ஏக்கப் பெருமூச்சுக்கள், அழிக்க வேண்டும் என்ற ஆத்திரத்தில் வெளிப்படும் தீவிரவாதத்தின் கொடூர வன்முறை கொதிக்கும் மூச்சு அவர்கள் வெடிக்கும் குண்டுகளின் வெப்பமும், துப்பாக்கித் தோட்டாக்களின் குண்டு வெடித்துச் சிதறும் உயிர்களின் வேதனைக் கதறல் வெப்பம், அவர்களை இழந்து அலறும் அவர்தம் உற்றார் சுற்றங்களின் ஓலக்குரலின் வெப்பம், தீவிரவாதத்தைத் தேடி அடக்க ஓடும் காப்புப்படையினரின் இறுக்கப் பேய் மூச்சின் வெப்பம், பெற்றோரை இழந்த பிஞ்சுகளின் ஆற்றொணாத் துயரப் பெருமூச்சும், கணவனை இழந்த மனைவியர், மனைவியரை இழந்த கணவர்கள் என இறந்தவர்களை எண்ணி அலறி அழும் அப்பாவிகளின் அல்லலுற்று ஆற்றாது அழுத கண்ணீரில் இருந்து வெளிப்படும் வெப்ப எழுச்சி வெடித்துச் சிதறும் கட்டடங்களின் வெப்பக்காற்று இவையாவும் கூட புவிவெப்பத்தினை அதிகரிக்கச் செய்கின்றன.

அரசியல் மேடைகளில் அலறி ஓலமிடும் ஆம்ளிபயர்கள் வெளிப்படுத்தும் வெப்பம்; கோடிக்கணக்கான வீடுகளில் உள்ள ஊடகங்களில் இருந்து வெளிப்படும் (ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வெளிவிடும் கதிர்வீச்சு 8) வெப்பக்கதிர் வீச்சு, அவ்வூடகங் களிலிருந்து வெளிவரும் அளவு கடந்த டெசிமல் ஊளை ஒளிகள் வெளிப்படுத்தும் வெப்பம், கோடிக்கணக்கில் செல்வர்களின் செவி ஓரத்திலிருந்து வெளிப்படும் கைபேசிகளின் அளவற்ற வெப்பம்; வாய் வழியே கத்தும்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒலிவெப்பம்; காமக்களியாட்டங்களை ஒளி வெள்ளத்தில் பாடமாக்கும் அருவருப்பான நீல வெப்பம், அதனைப் பார்த்து ஏங்கி நெஞ்சம் தகிக்கும் காலிகள் வெளிவிடும் கடும் காம வெப்பம், தீயவர்களின் நெஞ்சத்துள் கொடுமை கொதித்து வெளிப்படும் வெம்மை, பொறாமைத் தீயின் வெப்பம், பேராசை வெளிப்படுத்தும் பெரு வெப்பம், கோபதாபத்தில் வெளிவரும் கொடு வெப்பம், சுரண்டிக் கொழுத்தவன் வெளியிடும் எக்காள வெப்பம், உழைத்தவன் ஏமாந்து நொந்து வெளிவிடும் வெப்பம், விபசார விடுதிகளின்றும் வெளிப்படும் செந்நிற வெப்பம், வன்கொடுமை, பெண்கொடுமை வெளிப்படுத்தும் அவத்தை வெப்பம் என வெப்பங்களின் தன்மையையும், அளவுகளையும் அடுக்கிக் கொண்டே போகலாம். இவையாவும் புவியின் வெப்பத்தை அதிகரித்து நீர் மேகங்களை நீற்றுப் போக வைக்கும் வன்கொடுமையை என் சொல்ல.

அழுக்கும், கழிவுகளும் அல்லாமல், வெடித்த உடல்களிலிருந்து வெளியேறும் கொதிக்கும் ரத்தமும், வேதனையில் வெடித்த தசைகளின் சிதறல்களும், நொறுங்கிப்போன எலும்புகளும், அறுந்து நைந்து சிக்கலாகிப் போன நரம்புகளும் நீர் நிலைகளில் நிரப்பப்படுகின்றன. தாயின் பிள்ளையைக் கொன்று அத்தாயின் வயிற்றிலேயே புதைக்கும் கொடுமை நடைபெறுகிறது.

தாய் பால்பருகி, வளர்ந்துவிட்டு, அவள் மடிமிதித்து, மார்பறுத்து அதனுள் விஷ நீரை விட்டு நிரப்புகின்றோமே! அவள் வேதனை நம் உயிர்க்குலத்தை வேறறுத்து விடாதா? வெந்தணலில் பொசுக்காதா? வன்தீயாய் வாட்டி எரிக்காதா? இது கூடப் புரிந்து நம் உடம்பில் உறைக்காதா? நம் இழிசெயல் என்ன நடிப்பா? நாடகமா? நயவஞ்சகப்பஞ்சமா பாதகமா?

நாம் அறிந்தே இயற்கைத்தாயை, மண்ணை, மரத்தை, நீரை, வானை, வளியை, உயிர்களை அழிக்கிறோம், சிதைக்கிறோம். தாயை வீழ்த்தியபின் பின்னர் தாய் நிழல்க்கில்லை. வெப்பத்தின் நேரடித் தாக்குதலால் உருகி உருக்குலைந்து விடுவோம். எனவே இனியாவது பஞ்ச பூதங்களை நெஞ்சில் வைத்துக் கொஞ்சிக் கொண்டாடுவோம்; அவற்றிற்கு அஞ்சி, அவற்றின் தயவுக்குக் கெஞ்சி வாழ்வோம்!

Public domain. Digitization Muthulakshmi Research Academ

♦ ***சிவன் கோயிலும் செம்மை வாழ்வும் :*** முனைவர்ந.இரா. சென்னியப் பனார் பக். 26. விலை ரூ.8/- சோளிங்கர் சைவ சித்தாந்த வாழ்வியல் ஆய்வு மைய முதல் வெளியீடு. திருக்கோயில் அமைப்பு முறை தீபாராதனைத் தத்துவம் திருவிழாக்கள் உணர்த்தும் இறைவன் ஐந் தொழில்கள் முதலான செய்திகள் எளிமையாக விளக்கபெற்றுள்ளன. கிடைக்குமிடம் எஸ். கயல்விழி, 3, அண்ணாநகர், சோளிங்கர் - 631 102.

♦ ***நெல்லை திரு. பா. சோமாஸ்கந்தன் - வேலம்மாள் எண்பதாம் அகவை விழா மலர்*** - தொகுப்பு - சைவத்தமிழ்ப்புலவர் அம்பலநாதன், 15, ஸ்ரீ பாம்பன் இல்லம், எழில்நகர், திருநெல்வேலி - 7. சோமாஸ்கந்தர் தத்துவம், மிருத்தியுஞ் சய மந்திர விளக்கம் மனித உடல் உறுப்புகள் பற்றிய மருத்துவ விளக்கம் மற்ற தத்துவ விளக்கங்கள் அனைத்தும் அடங்கிய நூல்.

♦ ***திருச்செங்காட்டங்குடித் தலவரலாறு :*** வேளாக்குறிச்சி ஆதீன வெளியீடு. தலவரலாறு, கோயில் அமைப்பு முறை, இலக்கிய புராணப் பாடல்கள் ஆகியவற்றுடன் இந்நூலில் அமைந்துள்ள நவ தாண்டவர்களின் சிற்பங்கள், அறுபான் மும்மை நாயனார்களுடைய உலோகச் சிற்ப வடிவப் படங்கள் நூலுக்கு அழகூட்டுகின்றன.

♦ ***திருவடி இன்பம்:*** புலவர். ம. சிவசம்பு. 13. கயிலை இல்லம், சாலைத்தெரு, கொக்கிரகுளம், திருநெல்வேலி. சிவன் திருவடி நீழல் தரும் பேரின்பப் பேற்றினை விளக்கிடும் கட்டுரை நூல்.

♦ ***உள்ளம் குளிரும்மே :*** காஞ்சிபுரம் ந. தெய்வ சிகாமணி - தெ. கற்பகம் மணிவிழா மலர். கிடைக்குமிடம் 20, கனக சுப்புராயர் தெரு, பெரிய காஞ்சிபுரம் - 631 502.

♦ ***தேவகோட்டை ஜமீன்தார் AL. AR. சோமநாதன் செட்டியார் நூற்றாண்டுவிழா மலர்:*** கிடைக்குமிடம் இராம லெட்சுமணன், 18/171 பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை 600 001.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உன் தன் விருப்பு அன்றே!

வ. குமாரவேலு, வந்தவாசி

நல்வினை; தீவினை ஆகிய இரு வினைகட்கும் கன்ம மலம் முதற் கரணிய மாகும். மாயாமலம் துணைக் கரணியமாகும். ஆணவமலம் நிமித்தத்துணைக் கரணியமாகும். நிமித்த கரணியம் இல்லாது முதற் கரணியமும் நிமித்த கரணியமும் நிகழாது. எனவே ஆணவமலம் உள்ளவரை பிறப்பதும் மாள்வதும் இன்ப துன்பங்களைத் துய்க்கின்ற உறவு - பந்தம் - சொந்தம் ஆகிய பற்றுகள் நீங்காது. மலங்கள் நீங்கின் பிறப்பு இறப்பாகிய பந்தம் என்கின்ற சங்கிலி அறுபட்டு விடும். பந்தம் அறுபட்டு விடின் வீடு பேறு உண்டாகும்.

''இரு வினையால் வரும் இன்பொடு துன்பம்
இருவினை இல்லெனின் இல்லை பிறப்பே''

- பிரபுலிங்கலீலை

வினைகளை ஈட்டுதற்கு ஆணிவேரான ஆசைகளை அறுத்து எரியின் வீடுபேறு கிட்டுவது உறுதியாகும்.

''பற்றுறில் துன்பம் பற்றறின் இன்பமும்
முற்றாக எய்துமடி குதும்பாய்
முற்றாக எய்துமடி'' - குதம்பைச் சித்தர்

பாம்பொடு மதியும் படர்புன்சடைப் பூம்புனலும் பொதிந்த சிவபரஞ்சுடரின் போகமாம் பூங்கழல்களைப் பற்ற ஆணவ மலம் அணைபோட்டுத் தடுத்து நிற்கின்றது. விடையேறும் வேதியனை வணங்குவதன் வழியும் அடியார்கள் தொண்டின் மூலமும்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆணவமலத்தினை மெலிவிக்க முயல வேண்டும். தன் முனைப்பு இன்றி அன்புடன் பணி செய்யின் ஆணவமலம் மெல்ல மெல்ல மெலிவடையும். இறையன்பு விரைவில் வலுவடையும்.

தம் மெய்யடியார்கள் வேண்டிய வேண்டியாங்கு ஈட்டிய வினைகட்கு ஈடாக அருளும் பரங்கருணைத் தடங்கடலாகிய பரம் பொருளிடம் அது வேண்டும் இது வேண்டும் என நிறைவடையாத-முற்றுப்பெறாத பெரிய நீண்ட பட்டியலிட்டு வேண்டுவர். இன்றைய சகலர் நிலை மாந்தர்கள் பக்தி என்ற பெயரால் பரமனிடம் பேரம் பேசுகின்றனர். எனது தேவைகளையெல்லாம் நிறைவேற்றிவிட்டால் உனக்கு இன்னின்னவைகளையெல்லாம் காணிக்கையாகத் தருகிறேன் என்று ஒப்பந்தம் செய்து கொண்டு பல கோரிக்கைகள் வைக்கின்றனர். காணிக்கை என்ற பெயரால் கையூட்டுச் செலுத்தித் தமது காரியங்களை சாதித்துக் கொள்ள நினைக்கின்றனர். இறைவழிபாட்டில் தன்னலம் மட்டுமே தலைதூக்கி நிற்கின்றது.

ஆட்சியாளர்களிடம் மக்கள் தங்கள் தேவைகளைக் கோரிக்கைகளாகத் தெரிவிப்பது போல ஆண்டவனிடமும் தமது பேராசைகளை கோரிக்கைகளாக முறையிடுகின்றனர். மனத்துக்கண் மாசு இலராகி ஈர அன்புடை நெஞ்சமொடு அருளாளர்கள் ஆதிரைநாயகனிடம் வேண்டுவது நம்மினும் முற்றிலும் மாறுபட்டிருக்கும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிய வாதவூரர் ''புகுவிப்பாய் என்னை நின் தொழும்பில்'' என்று தொடக்கத்திலேயே ஒரே ஒரு வேண்டுதலை மட்டுமே இறைவனிடம் பதிவு செய்கின்றார். இவ் வேண்டுகோள் ஒன்றினையே தவஞானப் பனுவலான தமது திருவாசகத்தில் பல இடங்களில் பல பாடல்களில் அழுத்தமாக வலியுறுத்துகின்றார்.

இறைவனிடம் தமக்கு அன்பு எனும் ஆறு கரையது புரளுமாறு அருளவேண்டும் என்பதே அவரது முறையீடு.

''இடையறா அன்பு எனக்கு என் ஊடகத்தே நின்று உருகித் தந்தருள் எம் உடையானே'' என வேண்டுகின்றார்.

அன்பு ஒன்றினையே வேண்டும் வாதவூரர் மற்றொரு பாடலில்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

'வேண்டத்தக்கது அறியோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பு அன்றே'

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதும் தரும் வேணியரனை தன் புலனைந்தும் ஒன்றி நினைந்து, உணர்ந்து, நெகிழ்ந்து, அன்பே நிறைந்து, ஊற்றெழுங் கண்ணீரால் நனைந்து வணங்கி வழிபட்டு அவன் அருளும் பரிசினைப் பெற்று ஏற்று வாழ்வோம்.

பயனற்ற பதினான்கு...

1. ஆபத்துக்குதவாப் பிள்ளை
2. அரும்பசிக்குதவா அன்னம்
3. தாகத்தைத் தீர்க்காத தண்ணீர்
4. வரவறியாமல் செலவிடும் மனைவி
5. வெகுளியை வெல்லா மன்னன்
6. கற்றதன் வழிநில்லாச் சீடன்
7. நீராட இயலா நீர்நிலை
8. கொள்கையற்ற அரசியல்
9. உழைப்பில்லா ஊதியம்
10. நாணயமற்ற வணிகம்
11. ஒழுக்கம் இல்லாக் கல்வி
12. மனசாட்சி இல்லா செயல்
13. மனிதாபிமானம் அற்ற குறிக்கோள்
14. பக்தியில்லாத வாழ்வியல்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

உள்ளம் குளிரும்மே!

உலகத்து மக்கள் உள்ளம் குளிர வேண்டும். உள்ளங் குளிர கடவுளை வழிபடவேண்டும். நெஞ்சில் நீங்காது வழிபடவேண்டும். அப்போது தான் உள்ளம் குளிரும். நமது உள்ளம் பண்புஅடைய வேண்டு மானால் விநாயகனை வணங்குதல் வேண்டும்.

'உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும் தறிநிறுவி' என்பார் திருவிளையாடற்புராண ஆசிரியர். 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்பார் மாணிக்க வாசகர். உள்ளங்குளிர அவன் நாமத்தை நெஞ்சில் இருத்துதல் வேண்டும். அவனருளால் அவன்தாள் வணங்கினேன் என்பார் மாணிக்கவாசகர்.

உள்ளம் என்பது

மனம், உன்னம், (மனம்)அகம், சித்தம், இதயம், நெஞ்சம், முன்னம் (கருதுதல்) என்பன உள்ளம் சார்ந்தே வருவன ஆகும் அருளாளர்கள் இப்படியே பாடி மகிழ்கின்றனர்.

குளிர்தல் என்பது உள்ளம் நளிர்வு பெறுதல், பனியால் குளிர்தல், அன்பால் குளிர்தல் (அளி) சீதம் என்பதும் குளிர்ச்சி என்பதாகும். தண் என்பது குளிர்ச்சியே ஆகும் (தண்ணீர்) மழையும் குளிர்ச்சியே சாந்தம் எனும் அமைதி மனத்திற்குக் குளிர்ச்சியைத் தரும் என்பர்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

உள்ளம் குளிர்தல் என்பது

மனம் மகிழ்வே உள்ளம் குளிர்தல் ஆகும். மழை பெய்தால் உலக மக்கள் மனம் குளிர்கின்றது. பனியும் குளிர்ச்சியே. ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அமர்நாத் பனிலிங்கத்தைக் கண்டு மகிழ்வதும் உள்ளம் குளிர்வதற்குத்தான் என்பர். இறைவனிடம் செலுத்தும் அன்பால் அவன் காட்டும் கருணையே அருளாகும். கண்ணப்பர் அன்பால் இறைவனிடம் அருள்பெற்று உள்ளம் குளிர்ந்தார். முக்தியும் பெற்றார். சாந்தம், சத்தியம், அகிம்சை இம்மூன்றும் உள்ளம் மகிழ குளிர வழி என்று காந்தியடிகள் போதித்து அருளினார்.

விநாயகர் அகவல்

''அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்''

என்று பெருமான் திருவுருவம் காட்டப்படுகிறது நெஞ்சில் எப்போதும் நிலைத்திருக்கின்றவர் விநாயகப் பெருமான் ஆவார். அவர் உருவத்தையும் காட்டுகிறார்.

''சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி''

''அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்தும்''

என்பார் ஐந்தெழுத்தில் அடங்கியுள்ள அறிவதற்கரிய பதி, பசு, பாச உண்மைதனை எளியேனது மனக்கருத்தில் நிலையாக விளங்குமாறு உணர்த்தியும் உள்ளாய் என்பார்.

வாழ்த்துகிறோம்...

தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ஓம் நமசிவாய எழுதி 'சிவ சிவ' இதழை அன்பளிப்பாகப் பெற்று வரும் செய்யாறு அன்பர் திரு. R. கோபாலரத்தினம் குருவருளால் பல்வளமும் பெற்றுச் சிறக்க வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவன் கோயில்கள் பெரும்பாலும் கிழக்கு அல்லது மேற்குத் திசை நோக்கியனவாக அமைக்கப் பெறுதல் மரபு. அவ்வாறு அமைக்கப்பெற்ற திருக் கோயில்கள் சிலவற்றில் காலை அல்லது மாலை வேளைகளில் குறிப்பிட்ட மாதம் குறிப்பிட்ட இரண்டு அல்லது மூன்று நாட்களில் சூரிய கிரணங்கள் சிவ லிங்கத்தின் மீது படர்ந்து ஒளி வீசும் அந்நாட்களைச் சூரியன் சிவனைப் பூசிக்கும் சூரியபூசை நாட்களாகச் சைவ அன்பர்கள் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர்.

அவ்வகையில் நாகை மாவட்டத்தின்கண் அமையப் பெற்ற தேவாரத் திருத்தலமான செம்பொனார் கோயிலில் (திருச் செம்பொன்பள்ளி) பன்னிரண்டு நாட்கள் சூரியபூசை நடை பெற்று வருவது சிறப்பான நிகழ்வாகும். பன்னிருநாள் சூரிய பூசை என்பது சூரியர் பன்னிருவர் (துவாதச ஆதித்தர்கள்) பூசிப்பதாகப் பொருளாகும். பன்னிரு ஆதித்தர்களுடைய புடைப்புச் சிற்ப வடிவம் காஞ்சி கைலாசநாதர் கோயிலில் அமையப்பெற்றுள்ளது.

அப்பன்னிரு ஆதித்தர்கள் பெயர்களைப் பற்றிய நூல்களின் கருத்து ஐந்து வகையாகக் காணப்பெறுகின்றன. அவற்றை ஈண்டுக் காண்பாம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பன்னிரு ஆதித்தர்கள் (முதல்வகை)

1. தாத்ரு
2. சக்கரன்
3. அரியமான்
4. மித்திரன்
5. வருணன்
6. அம்சுமான்
7. இரணியன்
8. பகவான்
9. விவச்சுவான்
10. பூஷன்
11. கவித்ரு
12. துவஷ்டன்

பன்னிரு ஆதித்தர்கள் (இரண்டாம் வகை)

1. அஞ்சன்
2. தாதா
3. இந்திரன்
4. சவிதா
5. விச்சுவான்
6. பகன்
7. பருச்சனி
8. தோஷ்டா
9. மித்திரன்
10. தோஷா
11. விஷ்ணு
12. பூஷா

பன்னிரு ஆதித்தர்கள் (மூன்றாம் வகை)

1. விசுவான்
2. அரியமா
3. பூஷா
4. துவஷ்டா
5. சவிதா
6. பகன்
7. தாதா
8. விதாதா
9. வருணன்
10. மித்திரன்
11. சுக்கிரன்
12. உருக்கிரமன்

பன்னிரு ஆதித்தர்கள் (நான்காம் வகை)

1. வைகர்த்தன்
2. விவச்சுதன்
3. பகன்
4. மார்த்தாண்டன்
5. பாஸ்கரன்
6. ரவி
7. லோகப்பிரகாசன்
8. லோகசாஷி
9. திருவிக்ரமன்
10. ஆதித்தன்
11. திவாகரன்
12. அங்கிசமாலி

பன்னிரு ஆதித்தர்கள் (ஐந்தாம் வகை) (காசிக்கண்டம்)

1. லோலார்க்கர்
2. உத்ரார்க்கர்
3. ஸாம்பாதித்யன்
4. திரௌபதி
5. மயூகாதித்யன்
6. கஷோல்காதித்யர்
7. அருணாதித்யர்
8. விருத்தாதித்யர்
9. கேசவாதித்யர்
10. விமலாதித்யர்
11. கங்காதித்தியர்
12. யம ஆதித்யர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

முத்துக்கள் பத்து

- சிவமீன சிவாயனி

1. உண்மையான அன்புடையோருடன் கொள்ளும் உறவே சுவர்க்கம்.

2. ஒருவரின் சொல்லும், எழுத்தும், செயலும் அவர்தம் குணத்தை அளவிட்டுக்காட்டி விடும்.

3. ஓய்வு என்பது உள்ளத்தையும், உடலையும் நமது அடுத்த பணிக்குத் தயார் செய்வதே ஆகும்.

4. நீ பிறருக்குச் செய்த உதவியையும், பிறர் உனக்குச் செய்த தீமைகளையும் உடனே மறந்துவிடு. நீ பிறருக்குச் செய்த தீமைகளையும், பிறர் உனக்குச் செய்த நன்மைகளையும் என்றும் மறவாமல் நினைத்துக் கொண்டிரு. விரைவில் நீ உத்தமனாகி விடுவாய்.

5. பிரியமான பேச்சு கேட்போர் எவருக்கும் பெருமகிழ்ச்சியைத் தரும். இனிய சொற்களுக்கு எந்த மொழியிலும் பஞ்சமே இல்லை. புன்னகையைப் பொருள் கொடுத்து வாங்கி முகத்தில் அணிய வேண்டியதில்லை. உன் நன் நெஞ்சே நவரத்தினக் கருவூலம்; நீதான் அதன் அதிபதி. இன்னும் ஏன் தயக்கம். அன்போடு அள்ளித்தா! வகையாய் வாரி வழங்கு! இன்றைய நாளின் இணையற்ற வள்ளல் நீதான் என்ற பெயரை ஈட்டு.

6. வெப்பம் வேண்டுமென்றால் ஒன்று எரிந்துதான் ஆகவேண்டும்.

7. உணவைக் குறைத்துக் கொண்டால் உயிர் வாழும் நாளை நீட்டிக் கொள்ளலாம்.

8. சுவாசத்தைச் செம்மைப்படுத்திக்கொண்டால், சுகவாழ்வு இரட்டிப்பாகும்.

9. முறைகேடான புலன்நுகர்ச்சிக்கு ஆசைப்பட்ட மனத்தில்தான் பொய் உருவாகிறது. பொய் உருவாகும் உள்ளத்துள்தான் பெருங் கொடுமை விதைக்கப்படுகிறது.

10. உழைப்பும், நேர்மையும், நாணயமும், பண்பும்தான் ஒருவனை மதிப்பிடும் உறைகல்; அவன் செய்யும் தொழிலும் வகிக்கும் பதவியும் அல்ல.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

வந்தவாசி அ.வே.முனுசாமி (எ.வி.எம்)

தொடர்ச்சி....

சிருவ சிருட்டி (படைப்பு)

ஒப்புயர்வற்ற மேலோனாகிய சிவபெருமான் ஆகிய ஒருவனே உலகங்கள் ஏழினையும் படைத்தருளினன். அவ் வொருவனே அவ்வேழு உலகங்களையும் காத்தல், அழித்தல் முதலியவற்றையும் புரிந்தருளினன். சகல உலகங்களிலும் உள்ள உயிர்களுடன் ஒன்றியிருப்பவனும் அவன்ஒருவனே.

''ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே''

என்பது திருமந்திரம்.

ஏழு உலகங்களாவன பூலோகம், ஆவி உலகம், தேவ உலகம், ஞான உலகம், பரலோகம், முத்திலோகம், நரகலோகம் என்பனவாம்.

இம்மந்திரம் இறைவனே எல்லாமாய் இருப்பவன் என்பது உணர்த்துதல் நுதலிற்று.

செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் அழகிய பிரம தேவனும், மேகம் போலும் நிறத்தையுடைய திருமாலும், தீப்பிழம்பு போன்ற நிறத்தையுடைய உருத்திரனும் ஆகிய யாவரும் எங்கள் இறைவனாகிய சிவபெருமானே ஆவன். ஆதலின் அவனே முதற்காரணமாகிய மாயையைக் கொண்டும்; துணைக் காரணமாகிய

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மகளிர் ஆடவர் கூடும் கூட்டத்தைக் கொண்டும் ஐந்து கூறுகளாய்ப் பொருந்தும் உடம்புகளைத் தோற்றுவித்து நிற்கின்றான்.

உடம்பின் ஐந்து கூறுகளாவன ஐங்கோசங்களாம். அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்பன (வாம்). இவற்றுள் அன்னமய கோசம் பிரமனது ஆளுகைக்கும், பிராணமய கோசம் திருமாலினது ஆளுகைக்கும், மனோமயகோசம் சீகண்ட உருத்திரது ஆளுகைக்கும்; ஏனைய இரு கோசங்களும் அனந்ததேவரது ஆளுகைக்கும் உட்பட்டு இயங்குவனவாகும். இவற்றுள் முதல் மூன்றும் பிரகிருதி மாயையின் காரியங்களாம்; ஏனைய இரண்டும் அசுத்த மாயையின் காரியங்களாகும்.

''செந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
மைந்தார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்
கொந்தார் குழலியர்க் கூடிய கூட்டத்தும்
ஐந்தார் பிறவி அறுத்துநின் றானே''

என்பது திருமந்திரம்.

இதனால் படைப்பு வேறுபாடு ஒருவாறு தொகுத்துக் கூறப்பட்டது. இவ்வாறே படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் சிவபெருமான் சுத்த மாயையில் தான் நேரே செய்வன் என்பதும்; அசுத்த மாயையில் அனந்த தேவரை வாயிலாகக் கொண்டு செய்வன் என்பதும்; பிரகிருதி மாயையில் அனந்த தேவர் வழியாகச் சீகண்ட உருத்திரரை அதிட்டித்துச் செய்வன் என்பதும் உய்த்துணர்தல் தகும்.

இம்மந்திரம் மும்மாயையிலும் படைத்தல் முதலியவற்றைச் செய்யுமாறு கூறப்பட்டது.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் செய்வோரும்; அறிவுடைப் பொருள்; அறிவுஇப் பொருள்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்பவற்றில் தங்கி நின்று அவற்றை இயற்றுவோரும் பல்கோடி தேவர்களாகச் சொல்லப்பெறினும், அவர் அனைவரும் சிவபெருமான் ஒருவனது ஆணையைத் தாங்கி அவன் குறிப்பின் வழி நின்று இயங்கும் ஒரு கூட்டத்தினரேயாவர்.

ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉல கோடுயிர் தானே''

என்பது திருமந்திரம்.

'அண்டம்' எனவும், 'புவனம்' எனவும் வழங்கப்பெறும் இடங்கட்குத் தலைமை தாங்கி அவ்வவற்றை இயக்கும் கடவுளர் பலராயினும் அவர் பலரும் தாம்தாம் தம் இச்சை வழி நின்று செயல் புரிவோரல்லர். அவர் அனைவரும் சிவபெருமானது அடியவர் குழாங்களேயாவர். ஆயம் - கூட்டம்; அமைப்பால் வேறுபட்ட பல கூட்டமாயினும் ஒருவனது பணியாளராய் என்னும் முறைமையால் ஒரு கூட்டமே என்பது அறிவித்தற்கு ''ஓர் ஆயமே'' என்றார்.

இம்மந்திரம் பலரும் ஒருவனது ஏவலரே எனக் கூறி நின்றது. மேல் ''ஒருவனுமே'' என்ற மந்திரம் ஒருவனே பலராய் நின்று காரியம் செய்தல் கூறியது. இவையே இவ்விரு மந்திரங்களுள் காணும் வேற்றுமையாம்.

பிரார்த்தனைத் தலங்களும் பதிகங்களும்

மனித வாழ்க்கையில் பெருந்தொல்லைகள் தருவன திருமணப் பேறின்மை, மக்கட் பேறின்மை, வேலை வாய்ப் பின்மை, கடன்தொல்லை, நோய்களால் நலிவு. இவை தீர்வதற்கான பிரார்த்தனைத் தலங்கள் பதிகங்கள் தொடர் அடுத்த இதழில் தொடங்கும்.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

வினை தீர வழி

நெல்லை சிவமணி
புலவர் பு. சிவசம்பு

சைவ சித்தாந்தம் கற்ற ஒரு புலவர் ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்துவம் பற்றி விளக்கமாகச் சொன்னார். இவைகளை நாம் அனுபவித்தே தீர வேண்டும் என்றார். இதைப்போக்க வழி இல்லையா? என்றார் கூட்டத்தில் ஒருவர்.

ஏன் இல்லை. குருவருளாலும் திருவருளாலும் தொண்டு நெறியாகப் போக்கலாம் என்றார். அவர் என்ன தொண்டு செய்வது? எங்கு செய்வது? எப்படிச் செய்வது என்றார். திருமுறைகள் இதற்குத் தெளிவான விடை கூறுகின்றன. திருஞானசம்பந்தர்

அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பது உம் தமக்கு ஊனம் அன்றே
கைவினை செய்து எம் பிரான்கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எம்மைத் தீண்டப் பெறா திரு நீலகண்டம்

என்று இதற்குத் திருநாவுக்கரசர் நல்ல விளக்கம் சொல்லுகிறார்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிப்
சங்கரா சய போற்றி போற்றி என்றும்
அலை புனல்சேர் செஞ்சடை எம்ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே

என்பது அவர் வாக்கு. இதன் வழி நடந்து பயன் பெறுவோம். ''நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே''

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலமரம்

சித்தாந்த இரத்தினம்.
கு. சேதுசுப்ரமணியன்
முன்னாள் வேளாண்மை இயக்குநர்

''ஆல் போல் தழைத்து அருகுபோல் வேரோடி'' என மங்கலமான நிகழ்ச்சிகளில் வாழ்த்துவது நம் மரபாகும். 'ஆலமர்க் கடவுள்' என தென்முகத் தெய்வமாம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைக் குறிப்பிடுகிறோம். இதனை நாவுக்கரசர்

'ஆலினிற் கீழிருந்து ஆரணம் ஓதி'

என்னும் பாடலால், சிவபெருமான் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து சனகாதி முனிவர்களுக்கு முப்பொருள் உண்மை ஓதியதை உணர்த்துகின்றார். இவ்வாறு ஆலமரமானது தெய்வீகத் தன்மையைப் பெறுகின்றது. இத்தகைய ஆலமரம் தில்லையின் மற்றொரு தல விருட்சமாகக் கருதப்படுகிறது. தில்லைப் பெருங்கோயிலின் திருமூலட்டானப் பிரகாரத்தில் கருங்கல் வடிவில் அமைக்கப் பட்டுள்ளது. இது தவிர திருப்பழுவூர், அன்பில் ஆலந்துறை, திரு ஆலம் பொழில், திருநெல்வாயில் அரத்துறை, திருக்கச்சூர் ஆகிய திருத்தலங்களின் தல விருட்சமாகவும் உள்ளது.

ஆலமரம் இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் இயற்கையாக வளருகின்றது. இதன் தாவரவியல் பெயர், Ficus benghalemsis.L. என்பதாகும். Moraceae என்னும் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது. இதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொரு தெய்வீக மரம் அரச மரமாகும்.



பறவைகளின் எச்சத்தில் இருந்து விதைகள் மற்ற தாவரங்களில் விழுந்து முளைத்து (Epiphytic) பின்னர் பற்றிய

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தாவரத்தை அழித்து மரமாக வளருகின்றது. மரத்தின் கிளைகளிலிருந்து விழுதுகள் கீழ்நோக்கிச் சென்று பெருத்து தடித்த தண்டாகி விடும். நன்கு வளர்ந்த தண்டினை வெட்டி எடுத்து நட்டாலும் தழைத்து வளரும்.

ஆலமரமானது என்றும் பசுமையாக இருக்கின்ற நன்கு தழைத்து அகலமாகப் பரவுகின்ற மரமாகும். இலைகள் தடித்து முட்டை வடிவில் காணப்படும். மடலின் அடிப்பாகம் இதய வடிவாகக் காணப்படுவது சிறப்பாகும். பட்டை சாம்பல் நிறத்துடன் காணப்படும்.

மஞ்சரி எனப்படும் மலர், ஆண் பெண் மலர்களைத் தனித் தனியாகக் கொண்டிருக்கும். கனிகள் ஜோடியாகக் காம்பு இல்லாமல் இலைகளுக்குப் பக்கத்தில் காணப்படும்.

மரப்பட்டை மற்றும் இளந்தளிர்கள் 10% டானின் என்ற பொருளையும், மெழுகு போன்ற பொருளையும் கொண்டிருக்கின்றன. மேலும் இம்மரத்தில் கீடோன்கள், ∴பைட்டோஸ்டிரால், பைகயின் போன்ற செயல் திறன் வேதிப் பொருள்கள் காணப்படுகின்றன.

மரப்பட்டை சத்து அளிக்கும் மருந்தாகவும் (Tonic), தசைகளை சுருங்கச் செய்யும் (astringent) தன்மையுடையதாகவும் பயன்படும். மருத்துவத்தில் சிறுநீர்ப் பெருக்கியாகவும் (Diuretic) பயன்படுத்தலாம்.

மரத்தின் ''பால்'' (Latex) மூட்டுவலி, மற்றும் மூலநோய் ஆகியவற்றையும், இரணங்கள், தீப்புண் முதலியவற்றையும் குணப்படுத்துகின்றது.

மெலிதான மரக்குச்சிகள் பல்துலக்கப் பயன்படுத்துவதால் ஈறுகளுக்குப் பலமும், பல்லுக்கு உறுதியும் உண்டாகும். அதனால்தான் 'ஆலும், வேலும் பல்லுக்கு உறுதி' என்னும் பழமொழி உருவாயிற்று எனலாம்.

பழத்தின் சாறு இரத்தபேதி, வயிற்றுப் போக்கு ஆகியவற்றுக்கு நன்மருந்தாகும்.

மரப்பட்டையினைக் கொதிநீரில் ஊறவைத்து வடிகட்டிய சாறு (Infusion) சர்க்கரை நோயைக் கட்டுக்குள் வைக்கும் தன்மை கொண்டுள்ளது.

மகம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் ஆலமரத்தினை நட்டு வினைப்பயன் நீங்கி நற்பயன் பெறலாம்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

வடமொழிச் சொல் விளக்கம்

தொடர்ச்சி...

கதம்ப சாகபக்ஷியன்னம்	-	சாம்பார் சாதம்
சர்ஷாபான்னம்	-	கடுகு அன்னம்
க்ஷீரான்னம்	-	பால் அன்னம்
சரு	-	ஹவிஸ்
சத்து	-	சத்துமா
அபூபம்	-	அப்பம்
லட்டுகம்	-	இட்லி
சக்ரம்	-	தோசை
மோதகம்	-	கொழுக்கட்டை
சணகம்	-	பயறு சுண்டல்
ஜாங்கிரி, மதுர சுஷ்க்குளி	-	ஜிலேபி
ஈசபிஷ்ட்டம், பக்ஷ்ய சிம்மம்	-	கேசரி
குள அபூபம்	-	வெல்லப்பம்
மாஷாபூபம்	-	வடை
தக்ரதோயம்	-	நீர்மோர்
குளமிஸ்ர சுகந்ததோயம்	-	பாணக்கம்

புஷ்பங்களின் பெயர்கள்

சங்கு புஷ்பம்	-	சங்குப்பூ
தந்த புஷ்பம்	-	மரிக்கொழுந்து
கரவீர புஷ்பம்	-	அரளி
ஸ்வேதகரவிர புஷ்பம்	-	வெள்ளை அரளி
லகு நாக புஷ்பம்	-	நாகலிங்கபூ
த்ரோணம்	-	தும்பைப்பூ
பத்மம்	-	தாமரை
பில்வ பத்ரம்	-	பில்வ இலை

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பஸ்ம பத்ரம்	-	திருநூற்று பச்சிலை
புன்னாகம் புஷ்பம்	-	சரக்கொன்றை
நாகவல்லி	-	வெற்றிலை
பாடலிபுஷ்பம்	-	பாதரிபூ, கண்ட புஷ்பம்
ககுள புஷ்பம்	-	மகிழம்பூ
நீலோத்பல புஷ்பம்	-	நீலோத்பல பூ
சம்பக புஷ்பம்	-	ஷண்பக பூ
பாரிஜாத புஷ்பம்	-	பவளமல்லிகை
ஜாதிமல்லிகா புஷ்பம்	-	ஜாதிப்பூ
ரக்தமந்தாரம்	-	சிவப்பு மந்தாரை
பங்கஜ புஷ்பம்	-	தாமரைப்பூ
ஸ்வேத பங்கஜ புஷ்பம்	-	வெண் தாமரைப்பூ
த்ரோணம் புஷ்பம்	-	தும்பைப்பூ
துர்த்தூரம் புஷ்பம்	-	ஊமத்தைப்பூ
ஹேம ஸ்வர்ண புஷ்பம்	-	தங்க அரளிப்பூ
பீதவர்ண புஷ்பம்	-	செவ்வந்திப்பூ
தில புஷ்பம்	-	எள்ளுப்பூ

ஹோமத்ரவ்யங்கள் பெயர்கள்

நீவாரம், சாலி, வ்ருகி	-	குலச்சநெல்
யவம்	-	யவதான்யம்
ஹைமசாலி	-	பொற்சம்பர்
ரக்தசாலி	-	செந்நெல்
அதிரக்த சாலி	-	செம்பவள நெல் (சம்பா)
வைணவம்	-	மூங்கில் அரிசி
குளுத்தம்	-	கொள்ளு
திலம்	-	எள்
நிஷ்பாகம்	-	அவரை
சர்ஷபம்	-	கடுகு

-வரும்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈச்சம்பூண்டி 'சி. துரைராஜ்' எம்.ஏ., எம்.ஃபில்.,
கீழக்கவித்தலம்.

வள்ளலார் வழிபட்ட சிவத்தலங்கள்

சென்ற இதழ்த் தொடர்ச்சி....

6. திருவாரூர்

காவிரியின் தென்கரைத் தலங்களுள் ஒன்றாக விளங்குவது திருவாரூர். இங்குள்ள இறைவர் - வன்மீகநாதர். இறைவி - அல்லியங் கோதை, சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடல்பெற்ற இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புடையது. மனுநீதிச்சோழன் அரசோச்சிய இத்தலம் ஏயர்கோன் கலிக்காமர், காடவர் கோன் கழற்சிங்கர், விறன்மிண்டர், செருத்துணையார், நமிநந்தி, தண்டியடிகள் போன்ற நாயன்மார் களோடு தொடர்புடையது. சுந்தரர் பரவையாரோடு இல்லறம் நடத்திச் சிவனடியாரை ஆதரித்த தலம், சுந்தரர் திருத்தொண்டத்தொகை அருளிய தலம் என இத்தலத்தின் பெருமைகள் நீளும். புள்ளிருக்கு வேளூரை வழிபட்ட காலத்தில் வள்ளலார் இத் தலத்தையும் வழிபட்டார்.

7. திருமுதுகுன்றம்

வள்ளலார் கருங்குழியில் தங்கியபின் சிதம்பரத்திற்கும் வேறுசில தலங்களுக்கும் சென்று வழிபட்டு வந்தார். அவ்வாறு வழிபட்ட தலங்களுள் திருமுதுகுன்றமும் ஒன்றாகும். இவ்வூர் தற்போது விருத்தாசலம் என்று வழங்கப் படுகிறது. இறைவன் பழமலை நாதர். இறைவி - பெரிய நாயகி. இத்தலம் பற்றி சம்பந்தர் 7 பதிகங்களும், அப்பர் 1 பதிகமும்,

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சுந்தரர் 3 பதிகங்களும் பாடியுள்ளனர். சுந்தரர் பதிகம் பாடிப் பன்னீராயிரம் பொன் பெற்று அதனை மணிமுத்தாற்றில் இட்டு திருவாரூர்க் குளத்தில் எடுத்தார். இத்தலம் 'காசியிலும் விசம் பெரிது' எனச் சிறப்பிப்பர். அதனால் இத்தலத்திற்கு 'விருத்தகாசி' என்ற பெயரும் உண்டு.

8. திருவண்ணாமலை

ஐம்பூதத் தலங்களுள் இது தீத்தலமாகத் திகழ்கிறது. இறைவன் அண்ணாமலையார். இறைவி - உண்ணமுலையம்மை. சம்பந்தரின் இரண்டு பதிகங்களையும் அப்பரின் மூன்று பதிகங்களையும், பெற்று இத்தலம் திகழ்கிறது. 'நினது கோயிற்கு எளியனேன் வர வரம் அருளே' என்றும் வள்ளலார் பாடியிருத்ததால் இத்தலத்திற்கு வராமல் பாடியிருக்கலாமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. ஆயினும் பிறிதோரிடத்தில், 'வயங்கு அருணகிரி விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே' என முன்னிலை மொழியாக வாழ்த்துவதால், பின்னாளில் நேரில் சென்று வழிபட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

9. திருவதிகை

இது நடுநாட்டுத் தலங்களுள் ஒன்றாகவும், அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாகவும் விளங்குகிறது. இறைவன் - வீரட்டேஸ்வரர், இறைவி - பெரியநாயகி, தேவார மூவராலும் பாடப்பெற்ற இத்தலம். அப்பரும் திலகவதியாரும் சரியைத்தொண்டு செய்த தலமாகும். அப்பரின் சூலை நோயைப் போக்கியதும், சுந்தரர் இறைவனின் திருவடி தீக்கை பெற்றதும் இத்தலத்திலேயாகும்.

இவை தவிரச் சீகாழி, மதுரை ஆகிய சிவத்தலங்களுக்கும் சென்று வழிபட்டதாகத் தெரிகிறது. ஆயினும் ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. எனவே வள்ளலார் தம் வாழ்நாளில் சிவாலயங்களை வழிபடுதலிலும் இறைவனைக் கண்டு வணங்குவதிலும் பேரானந்தம் கொண்டிருந்தார் என்பதனை அறியமுடிகிறது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ



முதல் ஏழு திருமுறைகளை அருளிச் செய்துள்ள தேவார மூவரும் தம் பதிகப் பாடல்களில் பல்வேறு அலங்கார நயங்களை அமைத்து நவில்தொறும் நயம்பயக்கும் வகையில் இலக்கிய நயம் தோன்ற அமைத்துள்ளமையினை இலக்கிய ஆய்வியல் நோக்கில் நாம் அறிந்து இன்புறலாம். அவ்வகையில் ஒன்று முதலான எண்களை எண்அலங்காரம் தோன்ற அமைத்து அவர்கள் பாடியுள்ள சில பாடல்களை ஈண்டுக் காண்போம்.

எழுகூற்றிருக்கை

திருஞானசம்பந்தர் அருளிசெய்துள்ள இவ்இலக்கியம் ஒன்று முதல் ஏழு வரையுள்ள எண்களை ஏற்றியும் இறக்கியும் பாடப்பெற்றுள்ள தன்மையதாகும். இதனை ரதபந்தக்கவிதை என்றும் சித்திரத் தேர்க்கவி என்றும் அணிநூலார் குறிப்பிடுவர். இக்கவிதை வகையினை ஒட்டி நக்கீர தேவர் பதினோராந் திருமுறையிலும் திருமங்கையாழ்வார் நாலாயிர திவ்யப்பிரபந்தத்திலும் அருணகிரிநாதர் திருப்புகழ்த் திரட்டிலும் கவிதைகளை இயற்றியுள்ளமையினை நாம் அறிந்து தெளியலாம். பின்னாளில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஒன்று முதல் பத்து வரை எண்களை ஏற்றியும் இறக்கியும் காணாபத்யம், கௌமாரம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம் முதலான அறுவகை சமயக் கடவுளர்களைப் பற்றி இரதபந்தக் கவிதைகளை இயற்றியுள்ளமையினை அவருடைய பாடல்திரட்டின் மூலம் நாம் அறியலாம்.

'ஒருருவாயினை' எனத்தொடங்கும் திருஞான சம்பந்தருடைய திருஎழுகூற்றிருக்கை சீர்காழியில் அருளிச் செய்யப் பெற்றதாகும். இப்பதிகம் முதலாவது திருமுறையில் நூற்றி இருபத்து எட்டாவது பதிகமாக வியாழக்குறிஞ்சிப் பண்ணில் அமைந்து காணப்பெறுகின்றது.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஒன்று முதல் பத்துவரை

திருநாவுக்கரசர், விடம் தீண்டி உயிர்நீத்த அப்பூதியடிகளாருடைய திருமகனை மீண்டும் உயிர்ப்பிக்கவேண்டி அருளிச் செய்துள்ள விடம் தீர்த்த பதிகம் எனப்பெறும் நான்காந் திருமுறைப் பதிகப் பாடல்கள் பத்தும் ஒன்று முதல் பத்துவரையிலான எண்களின் அடிப்படையில் அமைக்கப்பெற்றுள்ள பாங்கினை நாம் படித்து மகிழலாம்.

அதுபோல, ஒன்றுமுதல் பத்துவரை உள்ள எண்களை ஏற்றி அமைத்து ஞானசம்பந்தர் பாடியுள்ள பாடல் ஒன்று, முதலாந் திருமுறையில் எழுபத்து ஒன்பதாவது பதிகத்தில் மூன்றாவது பாடலாகக் குறிஞ்சிப் பண்ணில் அமையப்பெற்றுள்ளது.

எண்ணிடையொன்றினர் இரண்டினருருவம்
எரியிடைமூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடைஐந்தினர் ஆறினரங்கம்
வகுத்தனரேழிசை எட்டிருங்கலைசேர்
பண்ணிடையொன்பது முணர்ந்தவர்பத்தர்
பாடிநின்றடிதொழ மதனனைவெகுண்ட
கண்ணிடைக்கனலினர் கருதியகோயில்
கழுமலநினையநம் வினைகரிசறுமே.

ஒன்று முதல் எட்டு வரை

அதுபோல ஒன்றுமுதல் எட்டுவரையிலான எண்களை ஏற்றித் திருஞானசம்பந்தர் பாடிய பாடல் திருவீழிமிழலைத் திருத்தலத்தில் அருளிச்செய்துள்ள முதலாந் திருமுறையில், நட்டபாடைப் பண்ணமைந்த பதிகத்தில் இரண்டாவது பாடலாக அமையப் பெற்றுள்ளது.

ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே.

எட்டு முதல் ஒன்று வரை

இவ்வாறு ஒன்று முதல் பத்துவரை எண்களை ஏற்றிப் பாடும் பாடல்களை ஆரோகணப்பாடல்கள் என்று இசைவல்லார் குறிப்பிடுவர்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மாறாக எட்டுமுதல் ஒன்று வரையிலான எண்வரிசையினைக் கீழ் இறக்கிப் பாடியுள்ள பாடல்கள் அவரோகணப் பாடல்கள் என்று குறிப்பிடப் பெறும். அவ்வாறு எட்டு முதல் ஒன்று வரை எண்களைக் கீழ்இறக்கிப் பாடியுள்ள ஞானசம்பந்தர் பாடல் மூன்றாவது திருமுறையில் நூற்றி இருபத்தி இரண்டாம் பதிகமாகப் புறநீர்மைப் பண்ணில் அமைந்துள்ள திருஓம மாம்புலியூர் பதிகத்தின் ஆறாவது பாடலாக அமையப் பெற்றுள்ளமையைப் காணலாம்.

மணந்திகழ் திசைக ளெட்டுமே ழிசையு
மலியுமா றங்கம்ஐ வேள்வி
இணைந்தநால் வேத மூன்றெரி யிரண்டு
பிறப்பென வொருமையா லுணரும்
குணங்களு மவற்றின் கொள்பொருள் குற்ற
மற்றவை யுற்றது மெல்லாம்
உணர்ந்தவர் வாழு மோமமாம் புலியூ
ருடையவர் வடதளி யதுவே.

- வரும்.

நிசினமீ

நவம்பர் 'சிவ சிவ' இதழில் அம்பிகை அருந்தவம், இருகடல்கள் சந்திப்பு, தில்லைவனம், வள்ளலார் வழிபட்ட சிவத்தலங்கள் ஆகிய கட்டுரைகள் சிறப்பாக உள்ளன. முனைவர் சிவ. திருச்சிற்றம்பலம் அவர்களுடைய 'திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ள வெண்பாப் பாடல்கள்' எனும் ஒரு பக்கக்கட்டுரை எங்களைப் போன்ற புலவர்கட்குப் பயனுடையது. புரிந்துகொள்ளக் கூடியது. எங்கள் செம்பொன்பள்ளிச் சம்பந்தர் பாடல்கள் இப்படி ஓர் நேரிசை வெண்பா அமைப்பு சிறுமாற்றம் செய்வதால் ஏற்படுகிறது என்பது எங்கட்கு வியப்பாக உள்ளது.. இதனை நானே எண்ணிப் பார்த்ததில்லை. யாரும் சொல்லியதும் இல்லை. அவர்களுடைய சிந்தனை நோக்கினைப் பாராட்டுகிறோம். தொடர்ந்து இரு பக்கங்களாவது அவர்கள் எழுத எதிர்பார்க்கிறோம். பாடல்களுக்கு ஆய்வுரைகளையும் எதிர்பார்க்கிறோம்.

- சி. தட்சிணாமூர்த்தி, செம்பொன்னார்கோயில்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அறிவுத் துணுக்கு

மகாராஜா டி.என்.எஸ் முருகதாஸ் தீர்த்தபதி,
சிங்கம்பட்டி.

விளையும் பயிர் முளையிலே என்று ஒரு முதுமொழி உண்டு. இதற்கிணங்க எனது காலஞ்சென்ற தாயார் வள்ளிமயில் நாச்சியார் நான் சிறு குழந்தையாக இருந்த போதெல்லாம் என்னைப் பல கோயில்களுக்கு உடன் அழைத்துச் செல்லும் பொழுது அக் கோவிலின் புராண வரலாற்றை வாங்கிப் படிப்பதை வழக்கமாகக் கொண்டவன் நான். அப்போது பெரும்பாலான கோவில் வரலாற்றில் மேய்ச்சலுக்குச் சென்ற பசு ஒன்று மிகவும் காலம் தாழ்த்தி வீடு திரும்புவதைச் சோதனை செய்து பார்த்தபோது அதற்கு வியப்பான விளக்கம் கிடைக்கிறது. அப்பசு குறிப்பிட்ட ஓரிடத்தில் நின்று பாலைச் சொரிந்துவிட்டு வீடு திரும்புவதைப் பார்க்கிறார்கள். ஆகவே அவ்விடத்தை கிளறிச் சோதித்த போதுதான் அங்கு சுயம்பு சிவலிங்கத்தைக் காணுகிறார்கள். தற்போதைய நவீன ஆய்வுகளின் மேலீட்டால் வீரிய இரகப் பசுக்கள் உற்பத்தியானதில் சில காலம் இயந்திரம்மூலம் அதிகப்படியான பாலைக் கரந்த நிலைமாறி தற்போது Laser - Ray அணுக்கதிர் பாய்ச்சி ஒரு மாட்டில் ஐம்பது அல்லது அறுபது லிட்டர் பாலைக் கரக்கவேண்டிய நிலை ஏற்பட்டதைப் பார்க்கும் பொழுதுதான் சுயம்புலிங்கத்தின் கதிர் ஈர்ப்புசக்தியால் பச பால் கரந்திருப்பதை உணர முடிகிறது. நான் சிறுவயதினராக இருந்தபோது ஒட்டுமொத்தமாகப் புராண வரலாறுகளைப் பொய் என்று எண்ணியது தவறு என்று உணர நேர்ந்தது.

இதைப்போன்றே திருநெல்வேலி மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டத்தில் மிகுதியான கோவில்களின் புராண வரலாற்றில் அகஸ்தியருக்காகச் சிவபெருமான் கயிலையில் நிகழ்ந்த கல்யாணக் காட்சியைக் காட்டியதாக வருவதைக் காணலாம்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவும் ஒட்டு மொத்தமாகக் கூறும்பொழுது நம்பத்தகுந்ததாக இருப்பதற்கு வாய்ப்பினை இராது.

வெள்ளையர் ஆட்சிகாலத் தொடக்கம் தாய் தந்தையரை இழந்து அரசோச்சும் வயது இல்லாது சிறு குழந்தையாகப் பட்டத்து இளவரசு இருந்தால் ''செல்வச்சிறுவர் காப்புளார் நீதிமன்றம்'' என்ற அமைப்பின் கீழ் அச்சிறுவர்கள் வளர்க்கப் படுவார்கள். இதனை மாவட்ட ரீதியில் பொறுப்பேற்று நடத்துவது மாவட்ட ஆட்சித்தலைவரே ஆவார். நானும் இதன் கீழ் வளர்க்கப் பட்டவன். தற்போது திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும் திரு. முருகராஜ் இ.ஆ.ப. அவர்களது தந்தை மறைந்த ஆர்.எஸ்.சுப்பையா பிள்ளை அவர்கள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த காலகட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் குற்றாலம் ஐந்தருவி ஸ்வாமி என்ற மாபெரும் துறவியிடம் மிகவும் ஈடுபாடு இருந்தது. அத்துறவிக்கு ஏதோ ஞானத் திருஷ்டியில் தோன்றி எனது பாதுகாவலரான மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நம் சிங்கம்பட்டி குழந்தை இராஜாவிற்கு வருங்காலத்தில் பல இன்னல்கள் காத்திருக்கிறது. ஆகவே தமிழ் மாத கடைசி வெள்ளிக்கிழமை தோறும் அவரது குலதெய்வமான அருள்மிகு சொரிமுத்தையனார் கோவில் சென்று தரிசித்து வந்தால் நலம் பயக்கும் என்று கூறியிருந்ததால் நான் அவ்வாறு கோவிலுக்குச் சென்று வந்தேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் முக்கிய அம்சம் யாதெனில் அருள்மிகு சொரிமுத்தையனார் கோவில் வளமையான காட்டுப்பகுதியில் அமைந்திருப்பதில் அங்கு அதனால் பல ஞானிகளும், சித்தர்களும் வாழ்கின்றார்கள் என்றும் அவர்களது அருட்பார்வை நம் குழந்தை இராஜா மேல்பட்டால் நலம் பயக்கும் என்பதே. இதனைக் கூர்ந்து பார்க்கும் பொழுது அகஸ்தியர் பல இடங்களில் வாழும் ரிஷிகளுக்கும், மகரிஷிகளுக்கும் மற்றும் சித்தர்களுக்கும் பெரும் காட்சியைக் காண்பித்திருக்கிறார் என்பது புலனாகிறது. இவ்விபரம் எனது ஆத்மார்த்த பூஜையில் துவங்கிற்று.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

முத்தியில்தான் எத்தனை வகை?

மானக் கஞ்சாற நாயனார் புராணம்

வாங்கவார்போல் நின்ற மறைப்பொருளாம் அவர் மறைந்து
பாங்கின் மலை வல்லியுடன் பழையமழ விடையேறி
ஓங்கிய விண்மிசை வந்தார்; ஒளி விசும்பின் நிலம் நெருங்கத்
தூங்கிய பொன் மலர்மாரி; தொழும்பர் தொழுது எதிர் விழுந்தார்.

அரிவாட்டாய நாயனார் புராணம்

என்று அவர் போற்றி செய்ய, இடபவா கனராய்த் தோன்றி
நன் றுநீ புரிந்த செய்கை. நன்னுத லுடனே கூட
என்றும் நம் உலகில் வாழ்வாய். என்று அவர் உடனே நண்ண,
மன் றுளே ஆடும் ஐயர் மழவிடை உகைத்துச் சென்றார்.

ஆனாய நாயனார் புராணம்

ஆனாயர் குழல் ஓசை கேட்டருளி அருள் கருணை
தான் ஆய திருஉள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணர் ஆம் கண்ணுதலார் விடை உகைத்து,
வான் ஆறு வந்து அணைந்தார் மதி நாறும் சடை தாழ.

மூர்த்தி நாயனார் புராணம்

பாதம் பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
ஏதம்பிணி யாவகை இவ்உலகு ஆண்டு, தொண்டின்
பேதம்புரி யாஅருள்பேர்அரசு ஆளப் பெற்று,
நாதன் கழல் சேவடி நண்ணினர் அண்ண லாரே.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருக நாயனார் புராணம்

அங்கண் அமரும் திருமுருகர் அழகுஆர் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின், முன்செய்த பூசை அதனால் புக்கருளிச்
செங்கண் அடல் ஏறுடையவர் தாம் சிறந்த அருளின் பொருள் அளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார் வுற்றார்.

உருத்திர பசுபதி நாயனார் புராணம்

காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்து அருள் செய்யமற் றவர்தாம்
தீது இலாநிலைச் சிவபுரி எல்லையின் சேர்ந்தார்.

மணமக்கள் வாழ்த்து....

⌘ சிவ சிவ அன்பர் எம்.இளங்கோ ஸ்ரீதேவியின்யின் தந்தையார் திரு. T.S. மாசிலாமணி பிள்ளை - ருக்மணி ஆச்சி ஆகியோர் முத்துவிழா 27.11.06 - திங்களன்று திருவா வடுதுறையில் குருவருள் துணையால் இனிது நிகழ்வுற்றது.

⌘ வந்தவாசி சைவசமயப் பயிற்சி மையச் செயற்குழு உறுப்பினர் திரு.அ. காளத்தி அவர்களுடைய மகன் கா. விசயகுமார் M.B.B.S., இரா. கவிதா M.C.A., திருமணம் 10.11.2006 அன்று சென்னையில் குருவருள் துணைகொண்டு நிகழ்வுற்றது. மணமக்கள் பல்லாண்டு வாழ சிவசிவ தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

⌘ ***23.11.2006:*** சிவ சிவ அன்பர் தி. இராதாகிருஷ்ணன் அவர்களுடைய சகோதரி தி. இலட்சுமி - கருப்பையன் திருமணம் அய்யம்பேட்டையில் குருவருள் துணைகொண்டு இனிது நிகழ்வுற்றது.

⌘ காஞ்சிபுரம் ஐயன்பேட்டை என். முருகேச செங்குந்தர் - தாட்சாயணி தம்பதியர் மகள் எம். கல்பனா - வெங்கட சுப்பிரமணியன் ஆகியோர் திருமணம் 27.11.06 அன்று காஞ்சிபுரத்தில் இனிது நிகழ்வுற்றது.

- ஆசிரியர்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆதீனவித்வான்
Dr. தி. பாலசுப்ரமணியன்

ஒரு பக்குவிக் கதை

அறிவைக் கொல்லும் அழுக்காறு

அஹிம்சை அரசன் ஐந்தாம் புலிகேசி அரண்மனை அங்கதேசப்புலவர் அலங்காரசதுர்வேதி மன்னனைப்புகழ்ந்து பத்து பாடல் பாடிப் பரிசிலாக நூறு பொற்காசுகளைப் பெற்றார். அவைப்புலவர் அகடவிகட ருக்குப் பொறாமை! ஆத்திரம். அவசரமாக எழுந்தார். மன்னர் மன்னா! பாடிப் பரிசு பெற்றால் போதாது; நான் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொன்னால்தான் பரிசு அவருக்கு நிலைக்கும். ''கேளும் அவைப்புலவரே! - மன்னன். அங்கப்புலவர் அலங்கார சதுர்வேதி அவர்களே! சற்றுக்கடினமான ஒரே ஒரு வினா கேட்கவா? அல்லது எளிமையான பத்து வினாக்களைக் கேட்கவா? பதில் சொல்லவில்லை என்றால் அவையின் சம்பிரதாயப்படி நீர் பெற்ற பொற்காசுகளில் பாதியை அடியேனுக்கு அளிக்க வேண்டும்! என்ன சொல்கிறீர்?

கடினமான ஒரே ஒரு வினாவை மட்டும் கேளுங்கள். தாங்களும் விதியை மீறக் கூடாது. நான் பதில் சொல்லியபின் நீங்கள் வினா எழுப்பினால் அதற்கான தண்டத்தொகையை மன்னரே அறிவிக்கட்டும் - அலங்கார சதுர் வேதி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஆயுள் சந்தா ரூ. 500/- புரவலர் நிதி ரூ. 1000/- செலுத்தி
இதழ் வளர்ச்சிக்கு அன்பர்கள் உதவிட அன்புடன் வேண்டுகிறோம்.

சபாஷ்! சரியான போட்டி. விதியை அகடவிகடர் மீறினால் ஐம்பது பொற்காசுகள் அங்கதேசப்புலவருக்கு அளிக்க வேண்டும் - மன்னர் ஐந்தாம் புலிகேசி. அவையோர் கரவொலி எழுப்பி மகிழ்ந்தனர்.

அகடவிகடர் அவரைப் பார்த்து'', முதலில் வந்தது எது? தேங்காயா? தென்னையா?

''தென்னைதான்'' அலங்காரர்.

அவ்வளவு உறுதியுடன் எப்படிக் கூறுகின்றீர் - அகடவிகடர்

மன்னர் மன்னா! அவையோரே! இது அநியாயம். அகடவிகடர் ஒரே ஒரு கேள்விதான் கேட்பதாக உறுதி கூறினார். நான் பதில் சொன்ன பின்பும் மீண்டும் ஒரு கேள்வி கேட்பது எவ்வகையில் நியாயம்? கூறுங்கள். அலங்கார சதுர்வேதி. புலவரின் புத்தி சாதுர்யத்தை ரசித்த மன்னன் அவைப்புலவர் ஐம்பது பொற்காசுகளைத் தண்டம் கட்ட வேண்டும் என்று தீர்ப்பளித்தான். அவையோர் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். பொறாமையால் ஆத்திரமும், ஆத்திரத்தால் அறிவிழந்தும், ஐம்பது பொற்காசு தண்டம் கட்ட வேண்டியதாயிற்றே என்று வெட்கித்தலை குனிந்தார் அகடவிகடர். புலவரின் நிலையைக் கண்ட புலிகேசி இரங்கி அத்தொகையைத் தானே தருவதாக அறிவித்தான்.

அதனைப் பெற்ற அலங்கார சதுர்வேதி அதனை அவைப் புலவருக்கே அன்பளிப்பாகத் தந்துவிடச் சொன்னார்.

மணமகள் தேவை

கா. ஹேமச்சந்திரன், வயது 30, பூசம். M.E., செங்குந்தர் சைவம்,. பட்டதாரி மணமகள் தேவை. சம்பளம் ரூ. 15,000 தொடர்புக்கு : நா . கார்த்திகேயன் 43/5 சன்னதி புதுத்தெரு, வந்தவாசி 604409, போன் : 04183 - 226753.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

REGISTERED AS NEWS PAPER SIVA SIVA R.N.I.NO.74543/99.
Licensed to Post without Pre-payment Videin Register No.PMG / CR / 3 / 03-05 / KKM
Date of Posting 1.12.2006; Posted at : Sub Post Office, Thirumangalakudi - 612 102.

நூல்-அஞ்சல்

பெறுநர்

சைவத்திரு.....அவர்கள்

.....

.....

.....

அனுப்புதல் :

தி. திருநாவுக்கரசு, 'சிவ சிவ' ஆசிரியர்
8/49, மேலைச்சாலை தெரு,
சுந்தரப்பெருமாள்கோவில் - 614 208. ☎ : 0435 2447323